சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.76/2020</u>

10.11.2025

வா.சா.1 திரு. சின்னராஜ், த/பெ. வீரமணி

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

தியாகராஜன் எனக்கு 6 வருடங்களாக பழக்கமாவார். 2018 ஆம் வருடத்திலிருந்து எனக்கு தியாகராஜனை தெரியும். தற்போதும் எனக்கும் தியாகராஜனுக்கும் நல்ல உறவு உள்ளதா என்றால் ஆமாம். நான் திருவாரூர் கஸ்தூரிபா மேல்நிலைப்பள்ளியில் மேலாளராக 22 வருடங்களாக பணியாற்றிவருகிறேன். எனக்கு அதை தவிர வேறு தொழில் இல்லை. எனக்கு திருவாரூரில் நல்ல பெயர் உள்ளது என்றாலும் வாதி தியாகராஜனுக்கும் நல்ல பெயர் உள்ளது என்றாலும் சரிதான். நான் பெயர் போடாமல் கையொப்பம், தேதி, தொகை மட்டும் பூர்த்தி செய்திருந்த காசோலையை வாதி என்னை சந்தித்த தேதியான 03.03.2019 ல் வைத்திருந்ததை அதை வாதி தெரியாமல் எடுத்துக்கொண்டு பூர்த்தி செய்து வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். காசோலை காணாமல் போனதாக நான் புகார் கொடுத்தேனா என்றால் வங்கியில் மட்டும் புகார் கொடுத்துள்ளேன். நான் கொடுத்த புகாருக்கு வங்கியிலிருந்து காசோலை பணமாக்க செலுத்திய பின்னிட்டு எனக்கு தகவல் கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் புகார் எதுவும் கொடுக்காததால்தான் எனக்கு வங்கியிலிருந்து தகவல் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தால் ரசீது வழங்கியிருப்பார்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2, 3 ஆவணங்கள் வழக்கிற்காக நான் தயார் செய்த ஆவணங்கள் என்றால் சரியல்ல. வாதி அறிவிப்பு கொடுத்த பின்னிட்டுதான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் உண்மையாக காசோலையை வாதியிடம் கொடுத்ததால்தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வாதியிடம் 03.03.2019 ல் ரூ.4,50,000/- கடன் வாங்கினேன் என்றால் சரியல்ல. கடன் வாங்கிய பின்னிட்டுதான் தாவா காசோலையை வாதிக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக தற்போது வாதி என்னை பார்க்க

வந்தபோது காசோலையை எடுத்து சென்றுவிட்டதாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த ஆதாரமும் இல்லாமல் வாதியின் மீது பொய்யான பழி சொல்வது சம்பந்தமாக அவதூறு நடவடிக்கை எடுப்பதில் எனக்கு ஆட்சேபணையில்லை. தாவா படி வாதிக்கு கடன் தொகையை கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.